## இலங்கை காப்புறுதிச் சபை - 2012

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இலங்கை காப்புறுதிச் சபையின் 2012 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

2003 நவம்பர் 12 ஆந் திகதிய 19 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் பிரகாரம் இலாபம் பெறுகின்ற நிறுவனம் மிகையூதியக் கொடுப்பனவாக ஒருவருக்கு ரூபா 1,000 செலுத்தக்கூடியதாக இருந்த போதிலும் சபையினால் 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்காக மிகையூதியக் கொடுப்பனவாக ரூபா 94,000 தொகை கொடுப்பனவு செய்வதற்குப் பதிலாக ரூபா 3,717,751 கூட்டுத்தொகையானது செலுத்தப்பட்டிருந்தது.

#### 1.2.2 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

அரச பொது முயற்சிகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி பணிப்பாளர் சபையினால் 2011 மே 01 ஆந் திகதி தொடக்கம் வாகனக் கடன் வழங்கும் போது அறவிடவேண்டிய வட்டி 4.2 சதவீதம் வரை குறைக்கப்பட்டிருந்தது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான வரிக்கு முன்னரான விளைவுகள் ரூபா 19,056,965 ஆன பற்றாக்குறையானதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 27,251,414 ஆக இருந்தமையினால் நிதிப்பெறுபேற்றில் ரூபா 8,194,449 தொகை அல்லது 30 சதவீத அதிகரிப்பைக் காட்டியது.

முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகின்ற போது சபையின் இனங்காணப்பட்ட மானியம் 76 சதவீதத்தினாலும் வட்டி வருமானம் 1.234 சதவீதத்தினாலும் அதிகரித்தமை மற்றும் தகைமைக் கட்டணங்கள் 39 சதவீதத்தினால் குறைவடைந்தமை இந்த நிதி விளைவுகளின் அதிகரிப்பிற்குத் தாக்கமளித்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

2012 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நிறைவேற்ற வேண்டியிருந்த செயற்பாடுகள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முறைப்பாட்டு விசாரணைகளுக்குத் தேவையான வழிகாட்டிக் கோவை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காப்புறுதி கட்டுப்பாட்டாளரினால் 1987 இன் போது வழங்கப்பட்ட பிரமாணங்கள் திருத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) நட்டத்தை ஈடுசெய்வதற்கும் காப்புறுதி முகவர்களைப் பதிவு செய்வதற்கான ஒழுங்கமைப்பு படிவம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஆண்டின் போது உள்நாட்டு பயிற்சி நடவடிக்கைகளுக்காக ரூபா 811,321 தொகையான செலவினம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 756,321 தொகை அல்லது 93 சதவீதம் நலன்புரி நடவடிக்கைகளுக்காகச் செலவு செய்யப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் காப்புறுதிப் பிரிவுகளின் பயிற்சி நடவடிக்கைகளில் சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(உ) மேற்பார்வைக்கான முகாமைத்துவ தகவல் முறைமைக்காக ரூபா 2.5 மில்லியன் நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் உரிய செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 3.2 பதவியணியினர் நிருவாகம்

2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் சபையில் 05 நிறைவேற்றுப் பதவி வெற்றிடங்கள் காணப்பட்டது. அதில் 02 நிறைவேற்றுப் பதவிகள் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்டது.

## 3.3 முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சம்பளத் திருத்தத்திற்காக பொருத்தமான முறைமைகளைப் பின்பற்றாமல் சபையின் சம்பளத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. சபையின் சம்பளத்திருத்ததைச் செய்வதற்கான அவசியத்தின் அடிப்படையில் அடிப்படைச் சம்பளத்தில் 25 சதவீத உச்ச எல்லையின் கீழ் திருத்தங்களைச் செய்வதற்கு ஆட்சேபனை இல்லை எனக் குறிப்பிட்டு அனுப்பப்பட்ட 2012 யூலை 18 ஆந் திகதிய பீஈடீ 360/12/2(ii) ஆம் இலக்க நிதி, திட்டமிடல் அமைச்சின் திறைசேரிப் பிரதிச் செயலாளரின் கடிதத்தை அடிப்படையாகக் கொண்டு சம்பள அதிகரிப்பு செய்யப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் இறுதி 06 மாதத்திற்காக சபையினால் ரூபா 1,564,338 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நிதி, திட்டமிடல் அமைச்சின் திறைசேரிப் பிரதிச் செயலாளரின் 2009 திசெம்பர் 27 அந் திகதிய எம்எப்2/4/ஐபீஎஸ்எல் /ஜீஈஎன் ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் செயல் முன்னேற்றங்களை அடிப்படையாகக் கொண்டு ஊக்கவிப்புக் கொடுப்பனவு முறைமை தயாரித்து சமர்ப்பிக்குமாறு காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2013 யூன் 30 ஆந் திகதி வரையும் ஊக்குவிப்பு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்திற்காக திறைசேரிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையினால் 2011 ஆம் ஆண்டில் மிகையூதியக் கொடுப்பனவு மற்றும் பெறப்படாத விடுமுறை நாட்களுக்காக 25 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 2,280,660 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்காக உழைக்கும் போதே செலுத்தும் வரி கழிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே முன்னைய ஆண்டுகளின் போது மிகையூதியக் கொடுப்பனவு மற்றும் விடுமுறை தினங்களுக்கான கொடுப்பனவின் போது உழைக்கும் போதே செலுத்தும் வரி கழிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையானர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2011 ஆம் ஆண்டில் சேமிக்கப்பட்ட சுகையீன விடுமுறைகளுக்கான படிகள் செலுத்தும் போது சபையினால் தயாரிக்கப்பட்ட நிர்வாகக் கைநூலில் குறிப்பிடப்பட்ட முறைகளின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்படாமையினால் ரூபா 259.556 கூட்டுத்தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) 2009 மற்றும் 2010 ஆண்டுகளில் விடுமுறை தினக் கொடுப்பனவுகளைச் செலுத்தும் போது அடிப்படைச் சம்பளத்திற்குப் பதிலாக அண்ணளவான சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்யப்பட்ட காரணத்தினால் சபை மேலதிகமாகச் செலுத்திய ரூபா 580,841 கூட்டுத்தொகையினை உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு 2013 யூன் 30 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2010 திசெம்பர் 09 ஆந் திகதி பொது முயற்சிகள் குழுவினால் வழங்கப்பட்ட கட்டளை இலக்கம் 11 இன் பிரகாரம் மூன்றாவது தரப்பினரின் இழப்பீடு செலுத்துவதற்காக மோட்டார் போக்குவரத்து ஆணையாளருடன் கலந்தாலோசித்து முறையான வேலைத் திட்டமொன்றைத் தயாரித்து அனுப்புமாறு கட்டளையிடப்பட்டிருந்த போதும் இது தொடர்பாக மீளாய்வாண்டின் போதும் போதியளவான செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பும் நல்ல ஆளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் பாதீடு செய்யப்பட்ட செலவினம் மற்றும் உள்ளவாறான செலவினங்களுக்கிடையே 55 சதவீதம் தொடக்கம் 234 சதவீதம் வரை முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் நிறுவனம் தயாரித்திருந்த பாதீடானது பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிறுவனத் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கொடுப்பனவு

(ஆ) பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்